எஸ்.டி.சி எண். 228/2021 தேதி:.21.03.2025

ம.சா.ஆ.1 ஆன திரு. இளங்கோவன் என்பவர் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார்.

1. நான் ஏற்கனவே விசாரணையின்போது எனது தொழில் நிறுவனம் தொடர்பான ஆவணங்களை தேவைப்பட்டால் தாக்கல் செய்வதாக குறிபிட்டிருந்தேன் என்றாலும் அது குறித்து ஆவணம் ஏதேனும் எடுத்து வந்துள்ளேனா என்றால் இல்லை. நான் எனது தொழிற்சாலையை விற்றதன் மூலம் கிடைத்த பணம் மற்றும் எனது மனைவியின் நகைகளை அடைமானம் வைத்த பணம் ஆகிவற்றை வைத்து தான் எதிரிக்கு பணம் கொடுத்துள்ளதாக எனது விசாரணையில் கூறியிருந்தேன் என்றாலும் தேவைப்பட்டால் அதற்குண்டான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றாலும் அது குறித்து ஆவணம் ஏதேனும் எடுத்து வந்துள்ளேனா என்றால் இல்லை. மிஷின்கள் விற்றதற்கான ரசீது இல்லை என நான் தெரிவித்த நிலையில், அதில் கிடைத்த பணம் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டதற்கான ஆவணம் ஏதேனும் எடுத்து வந்தேனா என்றால் இல்லை. நான் வேட் பதிவு சான்றிதழ் தாக்கல் செய்வதாக கூறியுள்ளேன் என்றாலும், அதனை எடுத்து வந்தேனா என்றால் அதை இன்று எடுத்து வர வேண்டும் என எனக்கு தெரியவில்லை. அதனால் எடுத்து வரவில்லை. நான் எதிரிக்கு கடனாக கொடுத்ததாக சொல்லப்படும் தொகை பெரிய தொகை என்றால் சரிதான். நான் எந்த வங்கியிலிருந்து பணத்தை எடுத்து எதிரிக்கு கொடுத்தேன் என்ற விவரததை நான் எனது புகாரில் சொல்லவில்லை என்றால் நான் வங்கியிலிருந்து பணம் எடுத்து கொடுக்கவில்லை.

2. நான் எங்கிருந்து பணத்தை எடுத்து எதிரிக்கு கொடுத்தேன் என்ற விவரத்தை எனது புகாரில் சொல்லவில்லை என்றால் நான் ஏற்பாடு செய்து வைத்திருந்த பணத்தை தான் எதிரிக்கு கொடுத்தேன். 01.10.2015 அன்று தான் நான் எதிரிக்கு பணம் கொடுத்ததாக எனது புகாரில் காணப்படுகிறது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள கடன் பத்திரத்தில் காசோலை எண். 028574 முதல் 058583 வரை உள்ள 10 காசோலைகளை எதிரி என்னிடம் வழங்கியதாக காணப்படுகிறது என்றால் சரிதான். நான் கடன் பத்திரத்தில் சொல்லியுள்ளவாறு காசோலை எண். 028574 முதல் 058583 வரை உள்ள 10 காசோலைகள் கிடையாது என்றாலும் காசோலை எண். 028574 முதல் 028583 வரை உள்ள 10 காசோலைகள் என்று

சொன்னால் கடன் பத்திரத்தில் தவறுதலாக எழுதப்பட்டிருக்கலாம். கடன் பத்திரத்தை நான் படித்து பார்க்கவில்லை என்று சொன்னால் நான் படித்து பார்த்தேன். காசோலை எண்களை கவனிக்கவில்லை. இவ்வழக்கில் நான் தாக்கல் செய்த கடன் பத்திரமானது இவ்வழக்கை நான் தாக்கல் செய்வதற்கு முன்பாக ஏற்படுத்தப்பட்ட பொய்யான ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. எதிரி என்னிடம் அளித்த 10 காசோலைகளில் 2 காசோலையை வைத்து இந்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ள நிலையில், மீதமுள்ள 8 காசோலைகள் என் வசம் உள்ளதா அல்லது எதிரி வசம் கொடுத்துவிட்டேனா என்றால் என் வசம் தான் உள்ளது.

3. 22.05.2018 அன்று தான் கடன் பத்திரம் அமலுக்கு வந்தது என்றால் சரிதான். கடன் பத்திரத்தின்படி 10.06.2018 முதல் 10 மாதங்களுக்குள் பணத்தை எதிரி திரும்ப செலுத்திவிடுவதாக கூறினார் என்று தான் இவ்வழக்கு என்றால் சரிதான். அவ்வாறெனில் எதிரி கொடுத்த 10 காசோலைகளும் தலா ரூ.2,50,000/-க்கு தான் என்றால் எதிரி என்னிடம் காசோலை கொடுக்கும் போது தொகையை பூர்த்தி செய்யாமல் தான் கொடுத்தார். இவ்வழக்கில் கண்ட காசோலை தொகையை நான் தான் பூர்த்தி செய்தேன். நான் தாக்கல் செய்துள்ள வழக்கறிஞர் அறிவிப்பு, புகார் மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் வழக்கில் கண்ட காசோலையை நானே பூர்த்தி செய்து தாக்கல் செய்தேன் என்ற விவரத்தை குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான்.

4. எதிரி தான் காசோலையை பூர்த்தி செய்து கொடுத்ததாக நீதிமன்றம் நினைக்கக்கூடிய வகையில் நான் மேற்சொன்ன தகவலை மறைத்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு காசோலையானது எத்தனை தவணைக்குண்டான காசோலை என்றால் **2ம் காசோலையை** வைத்து நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எதிரி கொடுத்த 3ம் தவணைக்கான காசோலை தான் மேற்சொன்ன 3ம் காசோலையா என்றால் எதிரி கடன் பத்திரத்தில் குறித்த கால கெடு முடிந்தும் பணம் செலுத்தாத நிலையில், எதிரி கூறியதன் அடிப்படையில் தான் காசோலையை நான் வங்கியில் தாக்கல் செய்து, இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். கடன் பத்திரத்தின் படி ஒவ்வொரு காசோலையும் தலா ரூ.2,50,000/- தான் என்றாலும், கூடுதல் தொகையை நிரப்பி நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி தொகையை பூர்த்தி செய்யாமல்

தான் காசோலையை கொடுத்தார்.

5. மேற்சொன்ன விவரத்தை நான் எனது புகாரில் குறிப்பிடவில்லை என்றால் அது குறித்து எனக்கு தெரியவில்லை எனது வழக்கறிஞரிடம் நான் எனக்கு தெரிந்த சங்கதிகளை கூறிவிட்டேன். எதிரி கொடுத்த 10 காசோலைகளில் **2 ம் காசோலையை** வைத்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ள நிலையில் 1 ம் காசோலை என்னால் வங்கியில் தாக்கல் செய்யப்பட்டு பணமாக்கப்பட்டது என்றால் சரியல்ல. முதல் காசோலை பணமாக்கப்படாமல் திருப்பப்பட்டது என்று நான் கூறும் நிலையில் அது குறித்து நான் எனது புகாரில் சொல்லவில்லை என்றால் தேவையில்லை என்பதால் சொல்லவில்லை. ரூ.2,50,000/-க்கு உண்டான காசேலையை அதிக தொகைக்கு பூர்த்தி செய்யும் பொருட்டு எதிரி எனக்கு அதிகார கடிதம் எதுவும் கொடுத்தாரா என்றால் எதிரி தொகையை பூர்த்தி செய்யாமல் கையொப்பம் மட்டும் செய்து, காசோலையை எனக்கு கொடுத்ததே அதிகாரம் கொடுத்ததாகும். மேற்சொன்ன விவரத்தை நான் எனது புகாரில் தேவையில்லை என்பதால் குறிப்பிட்டு சொல்லவில்லை.

6. எனது புகார் பத்தி 5 ல் நான் எதிரியை பலமுறை அணுகி பணத்தை கேட்டபோது தான் வழக்கு காசோலை கொடுக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது புகார் பத்தி 5ல் நான் பொய்யான தகவலை சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட காசோலை ஸ்டேல் காசோலை என்றால் எதிரி காசோலையில் தேதி நிரப்பாமல் தான் என்னிடம் கொடுத்தார் எனவே, அது ஸ்டேல் காசோலையாகாது. கடன் பத்திரத்தின் படி கடைசி காசோலையானது ஜுன் 2019 ல் காலாவதி ஆகிவிட்டது என்றால் சரியல்ல. ஜுன் 2019 முதல் 31.08.2020 வரை நான் காசோலையை வங்கியில் செலுத்த எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் எதிரியை நான் தொடர்ந்து கேட்டு கொண்டு தான் இருந்தேன். அவர் கூறியதன் பேரில் தான் காசோலையை வங்கியில் தாக்கல் செய்தேன். கடன் பத்திரம் ஏற்படுத்தி கொண்ட தேதியிலிருந்து 31.08.2020 வரை நான் காசோலையை வங்கியில் செலுத்த எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் எதிரியை நான் தொடர்ந்து கேட்டு கொண்டு தான் இருந்தேன். அவர் கூறியதன் பேரில் தான் காசோலையை வங்கியில் தாக்கல் செய்தேன்.

7. பொதுவாக ஒரு நபருக்கு கடன் கொடுக்கும்போது, அந்த கடனை அவர் திரும்ப செலுத்தும் திறன் மற்றும் நிலை கொண்டவரா என்பதை அறிந்து தான் கடன் கொடுப்பார்கள் என்றாலும், அவ்வாறு எதிரிக்கு நான் கடன் கொடுத்ததாக சொல்லப்படும் நிலையில், எதிரி அதனை என் வசம் திரும்ப செலுத்தும் திறன் மற்றும் நிலை கொண்டவராக இருந்தார் என்பதை நான் அறிந்து தான் கடன் கொடுத்தேன் என்ற விவரத்தை நான் எனது புகாரில் சொல்லவில்லை என்றால் நான் வழக்கின் அனைத்து சங்கதிகள் குறித்தும் எனது வழக்கறிஞரிடம் தெரிவித்துவிட்டேன். எதிரி இவ்வளவு பெரிய தொகையான காசோலை தொகையை திரும்ப செலுத்த தகுதியுடையவர் என்பதற்குண்டான ஆவணம் எதுவும் நான் எனது வழக்கறிஞரிடம் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. கடன் பத்திரத்தில் முதல் பார்ட்டியாக நான் பெயர் காண்பிக்கப்பட்டுள்ளதா என்றால் காண்பிக்கப்பட்டுள்ளது. 2 வது பார்டியாக எதிரியின் பெயர் காண்பிக்கப்பட்டுள்ளதா என்றால் காண்பிக்கப்பட்டுள்ளது. என்னிடம் காண்பிக்கப்படும் இவ்வழக்கில் நான் தாக்கல் செய்த கடன் பத்திரத்தில் எனது கையொப்பம் இல்லை என்று சொன்னால் சரிதான். கடன் பத்திரத்தில் ஒரு நபர் மட்டும் தான் சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். கடன் பத்திரத்தில் நான் கையொப்பம் செய்யாததாலும், ஒரு சாட்சி மட்டுமே கையொப்பம் செய்துள்ளதால் அது செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல, அது உங்களுடைய கருத்து ஆகும்.

8. நான் மேற்சொன்னவாறு அது எனது கருத்து அல்ல என்றாலும் சட்டப்படி ஒரு கடன் பத்திரத்தில் இரண்டு தரப்பினர்களும் இரு சாட்சிகளும் கையொப்பம் செய்ய வேண்டும் என்றாலும் அவ்வாறு செய்யப்படாததால் கடன் பத்திரம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல, நம்பிக்கையின் அடிப்படையில் தான் நான் எதிரிக்கு பணம் கொடுத்தேன். நான் தாக்கல் செய்த கடன் பத்திரம், பிராமிசரி நோட் என்ற வரையறைக்குள் வராது என்றால் சரியல்ல. நான் எதிரியிடமிருந்து எனது வங்கி கணக்கிற்க்கோ எனது மனைவியின் வங்கி கணக்கிற்கோ எனது மகனின் வங்கி கணக்கிற்கோ பணம் ஏதேனும் பெற்றுள்ளேனா என்றால் இவ்வழக்கு சம்மந்தமாக எதிரியிடமிருந்து தொகை எதுவும் பெறவில்லை. இவ்வழக்கு தவிர்த்து எதிரி என்னிடம் பணம் வாங்கியிருந்தார், அது பொருத்து நான் எதிரியிடமிருந்து பணம் பெற்றுள்ளேன். மேற்சொன்ன சங்கதிகள் எதையும் நான் எனது புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் எதிரி என்னுடைய குடும்ப நண்பர் என்பதால்

நான் சொல்லவில்லை. கடன் பத்திரத்தில் வெவ்வேறு தாள்களில் வெவ்வேறு அளவுகளில் எழுத்து அச்சிடப்பட்டு காணப்படுகிறது என்பதால் அது போலியான ஆவணம் என்றால் நான் ஏற்கனவே Font மாற்றத்தால் அவ்வாறு காணப்படுகிறது என்று எனது விசாரணையில் சொல்லிவிட்டேன். கடன் பத்திரத்தில் காணப்படும் கையொப்பம் எதிரியுடையது இல்லை என்றால் சரியல்ல. எனது புகாரில் எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பானது 15.09.2020 அன்று கிடைக்கப்பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது குறித்து எனது வழக்கறிஞருக்கு தான் தெரியும். இவ்வழக்கில் நான் தான் புகார்தாரர் என்றாலும் எனது வழக்கறிஞர் அல்ல என்றாலும் சரிதான். எனவே, புகாரில் கண்ட சங்கதிகள் குறித்து நான் தான் பதிலளிக்க வேண்டும் என்றாலும், எனது வழக்கறிஞர் பதில் அளிக்க வேண்டிய அவசியம் இல்லை என்றாலும் சரியல்ல. இவ்வழக்கில் புகாரில் கண்ட சங்கதிகளை படித்து பார்த்து தான் நான் கையொப்பம் செய்தேன். எதிரிக்கு 15.09.2020 அன்று வழக்கறிஞர் அறிவிப்பு சார்பு செய்யப்பட்டதற்கான ஆவணம் எதுவும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் எதிரிக்கு 15.09.2020 அன்று வழக்கறிஞர் அறிவிப்பு சார்பு செய்யப்பட்டதற்கான ஆவணம் எதுவும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள ம.சா.அ.5 ஆனதும் எஸ்.டி.சி எண். 228/2021 என்ற வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.5 ஆனதும் ஒரே ஆர்.டி நம்பருக்குண்டானது என்றாலும், நீதிமன்றத்தின் கவனத்தை திசை திருப்பும் வகையில் நான் ஒரே ஆவணத்தை இரண்டு வழக்கிற்கும் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு சார்பு செய்யப்பட்டதற்கான ஆவணம் எதுவும் முறையாக நான் தாக்கல் செய்யாததால் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு காசோலையில் கண்ட கையொப்பம் எதிரியினுடையது அல்ல என்றால் சரியல்ல.

9. ஒரு வேளை நான் எதிரிக்கு பணம் கொடுத்திருந்தால் கூட இவ்வழக்கு காசோலையானது காலாவதியான கடனுக்கு கொடுக்கப்பட்ட காசோலை என்றால் சரியல்ல. நான் முன்னுக்குபின் முரணாக சாட்சியம் அளிப்பதால் எனது சாட்சியம் ஏற்று கொள்ளக்கூடிய வகையில் இல்லை என்றால் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 2 ல் சொல்லப்பட்டுள்ள 10 சதவீத Benefit குறித்து நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் குறிப்பிடவில்லை என்றால் அது தேவையில்லை என்பதால் குறிப்பிடவில்லை. பொய்யான சங்கதிகளை கொண்டு

**இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இவ்வழக்கினை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.**

(S/d. Tmt.A.Theviya)
Judicial Magistrate,
Fast Track Court,
Ambattur.

// True Copy //

(S/d. Tmt.A.Theviya)
Judicial Magistrate,
Fast Track Court,
Ambattur.